**Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material**

**(தமிழ் 10,11 &12 - ஆம் வகுப்பு)**

# காப்பியங்கள்

- "பொருட் தொடர்நிலைச் செய்யுள்", = காப்பியம் எனப்படும்.
- காப்பிய இலக்கணம் குறித்துக் கூறும் நூல் = தண்டியலங்காரம்
- காப்பியம் = பெருங்காப்பியம், சிறுங்காப்பியம் என இரு வகைப்படும்.

## ஐம்பெரும்காப்பியங்கள்:

- ஐம்பெரும்காப்பியங்கள் என்ற முதன் முதலில் கூறியவர் = மயிலைநாதர்
- ஐம்பெரும்காப்பியங்களின் நூல் பெயர்களை முதன் முதலாகக் குறிப்பிட்டவர் = கந்தப்பதேசிகர்(திருத்தணிகைஉலா)
- சிலப்பதிகாரம் = இளங்கோவடிகள்
- மணிமேகலை = சீத்தலைச் சாத்தனார்
- சீவக சிந்தாமணி = திருத்தக்கதேவர்
- வளையாபதி = பெயர் தெரியவில்லை
- குண்டலகேசி = நாதகுத்தனார்
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டை காப்பியங்கள் எனப்படும்.
- சமணக் காப்பியங்கள் = சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி
- புத்தக் காப்பியங்கள் = மணிமேகலை, குண்டலகேசி

**சுத்தானந்த பாரதி:**

- கவியோகி சுத்தானந்தபாரதி ஐம்பெரும்காப்பியங்களையும் அணிகலன்களாக உருவகிக்கிறார்.
- காதொளிரும் குண்டலமும் கைக்குவளையாபதியும்
  கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும்
  மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்போது
  ஒளிரும் திருவடியும்

**ஐம்பெருங்காப்பியங்களின் வேறுபெயர்கள்:**

**நூல் =சிலப்பதிகாரம் =வேறுபெயர்கள்**

tnpsctamilnadu.weebly.com

# காப்பியங்கள்

- தமிழின் முதல் காப்பியம்
- உரையிடையிட்ட பாட்டைச் செய்யுள்
- முத்தமிழ்க்காப்பியம்
- முதன்மைக் காப்பியம்
- பத்தினிக் காப்பியம்
- நாடகப் காப்பியம்
- குடிமக்கள் காப்பியம்(தெ.பொ.மீ)
- புதுமைக் காப்பியம்
- பொதுமைக் காப்பியம்
- ஒற்றுமைக் காப்பியம்
- ஒருமைப்பாட்டுக் காப்பியம்
- தமிழ்த் தேசியக் காப்பியம்
- மூவேந்தர் காப்பியம்
- வரலாற்றுக் காப்பியம்
- போராட்ட காப்பியம்
- புரட்சிக்காப்பியம்
- சிறப்பதிகாரம்(உ.வே.சா)
- பைந்தமிழ் காப்பியம்

**நூல்= மணிமேகலை= வேறுபெயர்கள்**

- மணிமேகலைத் துறவு
- முதல் சமயக் காப்பியம்
- அறக்காப்பியம்
- சீர்திருத்தக்காப்பியம்
- குறிக்கோள் காப்பியம்
- புரட்சிக்காப்பியம்
- சமயக் கலைச் சொல்லாக்க காப்பியம்
- கதை களஞ்சியக் காப்பியம்
- பசிப்பிணி மருத்துவக் காப்பியம்
- பசு போற்றும் காப்பியம்

**நூல்= சீவக சிந்தாமணி= வேறுபெயர்கள்**

- மணநூல்
- முக்திநூல்

tnpsctamilnadu.weebly.com

- காமநூல்
- மறைநூல்
- முடிபொருள் தொடர்நிலைச் செய்யுள்(அடியார்க்கு நல்லார்)
- இயற்கை தவம்

## நூல்= வளையாபதி= வேறுபெயர்கள்

---------------------------------------------------------------

## நூல்= குண்டலகேசி = வேறுபெயர்கள்

- குண்டலகேசி விருத்தம்
- அகல கவி

(தமிழ் 10 - ஆம் வகுப்பு)

## ➢ சிலப்பதிகாரம்

## சொற்பொருள்:

- கொற்கை - பாண்டிய நாட்டின் துறைமுகம்
- தென்னம் பொருப்பு - தென்பகுதியில் உள்ள பொதிகைமலை
- பலியோடு படரா - மறநெறியில் செல்லாத
- பசுந்துணி - பசிய துண்டம்
- தடக்கை - நீண்ட கைகள்
- அறுவற்கு இளைய நங்கை - பிடாரி
- கானகம் - காடு
- உகந்த - விரும்பிய
- தாருகன் - அரக்கன்
- செற்றம் - கறுவு
- தேரா - ஆராயாத
- புள் - பறவை
- புன்கண் - துன்பம்
- ஆழி - தேர்ச்சக்கரம்
- படரா - செல்லாத
- வாய்முதல் - உதடு

## இலக்கணக்குறிப்பு:

- மடக்கொடி - அன்மொழித்தொகை

- தேரா மன்னா, ஏகாச் சிறப்பின் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- தடக்கை - உரிச்சொற்றொடர்
- புன்கண், பெரும்பெயர், அரும்பெறல் - பண்புத்தொகை
- உகுநீர், சூழ்கழல், செய்கொல்லன் - வினைத்தொகை
- அவ்வூர் - சேய்மைச்சுட்டு
- வாழ்தல் - தொழிற்பெயர்
- என்கால் என்பெயர், நின்னகர், என்பதி - ஆறாம் வேற்றுமைத்தொகை
- புகுந்து - வினையெச்சம்
- தாழ்ந்த, தளர்ந்த - பெயரெச்சம்
- வருக, தருக, கொடுக - வியங்கோள் வினைமுற்று

**பிரித்தறிதல்:**

- எள்ளறு = எள் + அறு
- புள்ளுறு = புள் + உறு
- அரும்பெறல் = அருமை + பெறல்
- பெரும்பெயர் = பெருமை + பெயர்
- அவ்வூர் = அ + ஊர்
- பெருங்குடி = பெருமை + குடி
- புகுந்தீங்கு = புகுந்து + ஈங்கு
- பெண்ணணங்கு = பெண் + அணங்கு
- நற்றிறம் = நன்மை + திறம்
- காற்சிலம்பு = கால் + சிலம்பு
- செங்கோல் = செம்மை + கோல்

**ஆசிரியர் குறிப்பு:**

- இளங்கோவடிகள் சேரமரபினர்.
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை.
- தமையன் = சேரன் செங்குட்டுவன்
- இவர் இளமையிலே துறவு பூண்டு குணவாயிற் கோட்டம் சென்று தங்கினார்.
- சமய வேறுபாடற்ற துறவி.
- பாரதியார் இவரை, "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்றார்.

tnpsctamilnadu.weebly.com

# காப்பியங்கள்

## நூல் குறிப்பு:

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்
- கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின், சிலப்பதிகாரமாயிற்று.
- இக்காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெரும் காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.
- புகார்க்காண்டம் = 10 காதை
- மதுரைக்காண்டம் = 13 காதை
- வஞ்சிக்காண்டம் = 7 காதை
- இக்காப்பியம் "உரையிடை இட்ட பாட்டைச்செய்யுள்" என அழைக்கப்படுகிறது.
- முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றிப் புகழ்வார்.
- "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியார் புகழ்கிறார்.
- வழக்குரைக் காதை மதுரைக்கான்டத்தின் பத்தாவது காதை.
- "இசை நாடகமே" சிலப்பதிகாரக் கதையின் உருவம்

## நூலெழுந்த வரலாறு:

- சேரன் செங்குட்டுவன், சீத்தலைச்சாத்தனாரோடும் இளங்கோவடிகளோடும் மலைவளம் காணச் சென்றான்.
- அங்கிருந்த மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண் தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், 'அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.
- அதனைக் கேட்ட இளங்கோவடிகள், "இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்" ஏறனு கூறினார்.
- சாத்தனாரும், "அடிகள் நீரே அருளுக" என்றார்.

## நூற்கூறும் உண்மை:

- அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்

(தமிழ் 12 - ஆம் வகுப்பு)

## ➢ சிலப்பதிகாரம்

### சொற்பொருள்:

- வெய்யோன் - கதிரவன்
- ஈர்வளை - அறுத்து செய்யப்பட்ட வளையல்
- இலங்கு - ஒளிருகின்ற
- தோளி - கண்ணகி
- முறை - நீதி
- நிறை - கற்பு
- படுகாலை - மாலைக்காலம்
- மாதர் - காதல்
- மல்லல் - வளம்
- கொற்றம் - அரசியல்
- வைவாள் - கூரியவாள்
- பழுது - உடல்

### இலக்கணக்குறிப்பு:

- ஈர்வளை - வினைத்தொகை
- கையேந்தி - ஏழாம் வேற்றுமைத்தொகை
- காற்சிலம்பு - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நல்லுரை - பண்புத்தொகை
- தண்குடை - பண்புத்தொகை
- பொற்சிலம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மாமதுரை - உரிச்சொற்றொடர்
- வைவாள் - உரிச்சொற்றொடர்
- வளைக்கை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

### நூல் குறிப்பு:

- இக்காப்பியம், "முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம்" என்று பல்வேறு சிறப்புப் பெயர்களால் பாராட்டப்படுகிறது.
- கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக வளர்ந்த கதையாதலினால் சிலப்பதிகாரம் எனப் பெயர்பெற்றது.
- இதுவே தமிழின் முதல் காப்பியம்.

tnpsctamilnadu.weebly.com

- புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று (3) காண்டங்களையும், மங்கள வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தருகாதை ஈறாக முப்பது (30) காதைகளையும் உடையது.

## நூல் கூறும் மூன்று உண்மை

- 1, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்,
- 2, உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்,
- 3, ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

## ஆசிரியர் குறிப்பு:

- இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை
- தமையன் = சேரன் செங்குட்டுவன்
- காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு
- இந்நூலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் இருவர். ஒருவர் அரும்பதங்களுக்கு மட்டும் உரை எழுதிய அரும்பத உரைகாரர்.

மற்றொருவர் விளக்கமாக உரை எழுதிய அடியார்க்கு நல்லார்(இவர் உரை முழுவதுமாக கிடைக்கவில்லை)

- இக்காலத்தே வாழ்ந்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை நூல் முழுமைக்கும் உள்ளது.

## நூல் சிறப்பு:

- பாரதியார் இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து, "நெஞ்சையள்ளும் சிலம்பு" எனப் புகழ்ந்துள்ளார்.
- கவிமணி இந்நூலை, "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தோறும் சிலப்பதிகாரம்" எனப் பாராட்டியுள்ளார்.

(தமிழ் 9 - ஆம் வகுப்பு)

# மணிமேகலை

## சொற்பொருள்:

- ஆயம் - தோழியர் கூட்டம்
- ஆசனம் - இருக்கை
- நாத்தொலைவில்லை - சொல் சோர்வின்மை

tnpsctamilnadu.weebly.com

- யாக்கை - உடல்
- பிணி நீங்கா - நீங்கா நோய்
- பேதைமை - அறியாமை
- செய்கை - இருவினை
- உணர்வு - அறிவியல் சிந்தனை
- அரு - உருவமற்றது
- உறு - வடிவம்
- வாயில் - ஐம்பொறிகள்
- வேட்கை - விருப்பம்
- பவம் - பயன் நோக்கிய செயல்
- கொடு - கொம்பு
- அலகில - அளவற்ற
- தொக்க விலங்கு - விலங்குத்தொகுதி
- குரலை - புறம் பேசுதல்
- வெஃகல் - விரும்புதல்
- வெகுளல் - சினத்தல்
- சீலம் - ஒழுக்கம்
- தானம் - கொடை
- கேண்மின் - கேளுங்கள்
- உய்ம்மின் - போற்றுங்கள்
- உறைதல் - தங்குதல்
- கூற்று - எமன்
- மாசில் - குற்றமற்ற
- புக்கு - புகுந்து

**இலக்கணக்குறிப்பு:**

- தேவியும் ஆயமும் - எண்ணும்மை
- அருந்தவர், நல்வினை - பண்புத்தொகை
- வாழ்க - வியங்கோள் வினைமுற்று
- செய்தவம், வீழ்கதிர் - வினைத்தொகை
- பெரும்பேறு - பண்புத்தொகை
- பல்லுயிர், நல்வினை, தீவினை, பேரின்பம் - பண்புத்தொகை
- ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வெறுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

tnpsctamilnadu.weebly.com

- கம்மத்தீ - உருவகம்
- பொல்லக்காட்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- இடர் - இன்னல்

**பிரித்தறிதல்:**

- எழுந்தெதிர் = எழுந்து + எதிர்
- அறிவுண்டாக = அறிவு + உண்டாக
- இயல்பீராறு = இயல்பு + ஈறு + ஆறு
- நன்மொழி = நன்மை + மொழி
- எனக்கிடர் = எனக்கு + இடர்
- நல்லறம் = நன்மை + அறம்

**ஆசிரியர் குறிப்பு:**

- மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்பது இவரின் இயற் பெயர்.
- இவர் திருச்சியில் உள்ள சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்.
- தானிய வாணிகம் செய்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்நூர்புலவன் என்று இளங்கோவடிகள் இவரை பாராட்டியுள்ளார்.
- இவரது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு

**நூல் குறிப்பு:**

- இந்நூல் ஐம்பெரும்காபியங்க்களுள் ஒன்று.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரே கதை தொடர்பு உடையவை.
- இவை இரண்டும் "இரட்டை காப்பியங்கள்" என அழைக்கப்படும்.
- இந்நூலுக்கு "மணிமேகலை துறவு" என்ற பெயரும் உண்டு.
- இந்நூல் பௌத்த சமயச் சார்பு உடையது.
- முப்பது காதைகள் கொண்டது. இருபத்தி நான்காவது காதை என்பது ஆபுத்திரன் நாடு அடைந்த காதை ஆகும்.

(தமிழ் 11 - **ஆம் வகுப்பு)**

➢ **சீவக சிந்தாமணி**

# காப்பியங்கள்

## சொற்பொருள்:

- சிலை - வில்
- குரங்கின - வளைந்தன
- கருங்கொடி - கரிய ஒழுங்கு
- கொடி - ஒழுங்கு
- எயிரு - பல்
- எரிமலர் - முருக்கமலர்
- இவுளி - குதிரை
- நுனை - கூர்மை
- பிணை - பெண்மான்
- இழுக்கி - தப்பி
- மொய்ம்பு - வலிமை
- கணிகை - பொதுமகள்
- குரங்கி - வளைந்து
- நிலமடந்தை - பெற்ற தாய்
- கைத்தாய் - செவிலித்தாய்
- புரி - முறுக்கு
- பொழில் - சோலை
- பறவை - கின்னரமிதுனம் என்னும் பறவை
- மிடறு - கழுத்து
- கடி - விளக்கம்
- விம்மாது - புடைக்காது
- உளர - தடவ
- கால் - காற்று
- கடம் - காடு
- மாழ்கி - மயங்கி
- எழினி - உறை
- மடங்கல் - சிங்கம்
- கொல்லை - முல்லைநிலம்
- தூமம் - அகிற்புகை
- இருவிசும்பு - செவிலித்தாய்
- ஓதி - சொல்லி
- பத்தர் - யாழின் ஓர் உறுப்பு

## இலக்கணக்குறிப்பு:

- எழீஇ - சொல்லிசை அளபெடை
- பாவை - உவமை ஆகுபெயர்
- கருங்கொடி - பண்புத்தொகை
- கடிமிடறு - உரிச்சொற்றொடர்
- சிறுநுதல் - அன்மொழித்தொகை
- சிலைத் தொழில் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- இருங்கடல் - பண்புத்தொகை
- பவளச்செவ்வாய் - உவமைத்தொகை

# காப்பியங்கள்

- விரிமலர் - வினைத்தொகை
- எரிமலர் - உவமத்தொகை
- ஒப்ப - உவமஉருபு
- விடுகணை - வினைத்தொகை
- வடிநுனை - வினைத்தொகை
- கழித்தவேல் - பெயரெச்சம்
- நீக்கி - வினையெச்சம்
- தடங்கண் - உரிச்சொற்றொடர்
- நின்றாள் - வினையாலணையும் பெயர்
- கமழ் ஓதி - அன்மொழித்தொகை
- கோதை - உவமை ஆகுபெயர்
- செவ்வாய் - அன்மொழித்தொகை
- இன்னரம்பு - பண்புத்தொகை
- திண்டேர் - பண்புத்தொகை
- அடுதிரை - வினைத்தொகை
- அன்ன - உவமஉருபு
- நெடுங்கண் - பண்புத்தொகை
- சுரந்து, முதிர்ந்து - வினையெச்சம்
- போக, நடக்க - வியங்கோள் வினைமுற்று
- காளை - உவம ஆகுபெயர்

## நூல் குறிப்பு;

- சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்பது பொருள்.
- இக்காப்பியத்தை இயற்றியவர் திருத்தக்கதேவர்.
- இவர் சோழ நாட்டினர். சமணத் துறவி.
- இவர் நரி விருத்தம் என்ற நூலையும் படைத்துள்ளார்.
- சீவக சிந்தாமணிக்கு "மண நூல்" என்ற பெயரும் உண்டு.
- இது நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாகப் 13 இலம்பகம் கொண்டுள்ளது.
- இந்நூல் விருத்தம் என்ற பாவினால் அமைந்த முதல் நூல்.
- இந்நூலிற்கு உரை கண்டவர் = உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்.
- சீவகன் வரலாற்றை கூறுவதால் இந்நூல் சீவக சிந்தாமணி எனப் பெயர் வழங்கப்படுகிறது.

## காந்தருவதத்தையார் இலம்பகம்:

- வெள்ளி மலையின் வேந்தன் கலுழவேகன்.
- அவன் மகள் காந்தருவதத்தை.
- காந்தருவதத்தையின் தோழி வீணாபதி

tnpsctamilnadu.weebly.com

- யாழ்போர் நடந்த இடம் இராசமாபுரம்
- காந்தருவதத்தை சீதத்தன் என்னும் வணிகனிடம் ஒப்படைக்கப்பட்டாள்.
- சீவகனின் நண்பன் நபுலன் போட்டியில் சீவகன் காந்தருவதத்தையை வென்று அவளை மணம் முடித்தான்.

## ❖ ஐம்பெருங்காப்பியங்கள் அட்டவணை:

| நூல் | சமயம் | பாவகை | ஆசிரியர் | நூல் அமைப்பு |
|---|---|---|---|---|
| சிலப்பதிகாரம் | சமணம் | நிலைமண்டில ஆசிரியப்பா + கொச்சக கலிப்பா | இளங்கோவடிகள் | 3 காண்டம், 30 காதை, 5001அடிகள் |
| மணிமேகலை | பௌத்தம் | நிலைமண்டில ஆசிரியப்பா | சீத்தலைச் சாத்தனார் | 30 காதை, 4755 வரிகள் |
| சீவகசிந்தாமணி | சமணம் | விருத்தம் | திருத்தக்கதேவர் | 13 இலம்பகம், 3145 பாடல்கள் |
| வளையாபதி | சமணம் | விருத்தம் | ------------ | 72 பாக்கள் கிடைத்துள்ளன |
| குண்டலகேசி | பௌத்தம் | விருத்தம் | நாதகுத்தனார் | 224 பாடல்கள் கிடைத்துள்ளன |

## ➢ ஐஞ்சிறுகாப்பியங்கள்

- ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள்
- ஐஞ்சிறுகாப்பியங்கள் இலக்கணம் கூறும் நூல் = தண்டியலங்காரம்
- ஐஞ்சிறுகாப்பியங்கள் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியவர் = சி.வை.தாமோதரம்பிள்ளை
- நாக குமார காவியம் = ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- உதயன குமார காவியம் = ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- யசோதர காவியம் = வெண்ணாவலூர் உடையார் வேள்
- நீலகேசி = ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சூளாமணி = தோலாமொழித்தேவர்

## ➢ நாககுமார காவியம்

**நாககுமாரகாவியத்தின் உருவம்:**

- ஆசிரியர் = பெயர் தெரியவில்லை
- காலம் = கி.பி.16ஆம் நூற்றாண்டு
- பாடல்கள் = 170
- சருக்கம் = 5
- பாவகை = விருத்தப்பா
- சமயம் = சமணம்

**பெயர்க்காரணம்:**

- கதைத் தலைவன் நாககுமாரன் பற்றிக் கூறுவதால் நூல் இப்பெயர் பெற்றது.

**வேறு பெயர்:**

- நாகபஞ்சமி கதை

**பொதுவான குறிப்புகள்:**

- நாகபஞ்சமி நோன்பின் சிறப்பைக் கூறும் நூல்.
- மனதையும் போகத்தையும் மிகுதியாக கூறும் சமண நூல்.
- 519 பெண்களை மணக்கிறான் தலைவன்
- இந்நூலை "சொத்தை நூல்" என்கிறார் மது.ச.விமலானந்தம்

**மேற்கோள்:**

- அரனின்றிப் பின்னை ஒன்றுமுயிர்க்கு அரணில்லை என்றும்
  மறமின்றி உயிர்க்கு இடர்செய் மற்றொன்றும் இல்லைஎன்றும்
  திறமிகு உணர்ந்து தேறித் தீக்கதிப் பிறவிக்கு அஞ்சி
  மறம் இதை விட்டு அறத்தில் வாழுமின் உலகத்தாரே

## ➢ உதயணகுமார காவியம்

**உதயனகுமார காவியத்தின் உருவம்:**

- ஆசிரியர் = பெயர் தெரியவில்லை
- காலம் = கி.பி.15ஆம் நூற்றாண்டு
- பாடல்கள் = 369
- காண்டம் = 6

**காண்டங்கள்:**

tnpsctamilnadu.weebly.com

- உஞ்சைக் காண்டம்
- இலாவண காண்டம்
- மகத காண்டம்
- வத்தவ காண்டம்
- நரவாகன காண்டம்
- துறவுக் காண்டம்

## வேறு பெயர்:

- உதயணன் கதை

## பொதுவான குறிப்பு:

- இந்நூலின் மூலநூல் = பெருங்கதை
- கதைத்தலைவன் = உதயணன்
- உதயணனை= "விச்சை வீரன்" என்றும் கூறுவர்.
- உதயணன் யாழின் பெயர் = கோடபதி
- "பெயர் தான் காவியம், ஆனால் காவியம் என்பது இம்மியும் இல்லை" என்பார் = மது.ச.விமலானந்தம்

## மேற்கோள்:

- வீணை நற்கிழத்தி நீ, வித்தக உருவி நீ
  நாணின் பாவை தானும் நீ, நலன்திகழ்மணியும் நீ
  காண என்றன் முன்பாய்க் காரிகையே வந்து, நீ
  தோணி முகம் கட்டு எனச் சொல்லியே புலம்புவான்

# ➢ யசோதர காவியம்

## யசோதர காவியத்தின் உருவம்:

- ஆசிரியர் = வெண்ணாவலூர் உடையார் வேள்
- காலம் = 13ஆம் நூற்றாண்டு
- பாடல்கள் = 320
- சருக்கங்கள் = 5
- பாவகை = விருத்தம்
- சமயம் = சமணம்

## பொதுவான குறிப்புகள்:

tnpsctamilnadu.weebly.com

- வடமொழியில் எழுதப்பட்ட உத்திர புராணத்தில் இருந்து இதன் கதை எடுக்கப்பட்டது என்றும், புட்பதத்தார் எழுதிய யசோதர சரிதத்தின் தழுவல் என்றும் கூறுவர்.
- "மாளவ பஞ்சம்" என்னும் கருநாடக இசை பற்றி கூறப்பட்டுள்ளது.

**மேற்கோள்:**

- யான் உயிர் வாழ்தல் எண்ணி எளியவர்
  தம்மைக் கொல்லின் வான்உயிர் இன்பமே
  அல்லால் வருநெறி திரியும் அன்றி
  ஊன்உயிர் இன்பம் எண்ணி எண்ணாமல்
  மற்றொன்றும் இன்றி மானுடர்வாழ்வு மண்ணில்
  மரித்திடும் இயல்பித்ரு அன்றோ

## ➢ நீலகேசி

**நீலகேசியின் உருவம்:**

- ஆசிரியர் = பெயர் தெரியவில்லை
- காலம் = 6ஆம் நூற்றாண்டு
- பாடல்கள் = 894
- சருக்கம் = 10
- பாவகை = விருத்தம்
- சமயம் = சமணம்

**வேறு பெயர்:**

- நீலகேசி தெருட்டு
- நீலம்(யாப்பருங்கல விருத்தியுரை)

**பெயர் காரணம்:**

- நீலம் = கருமை, கேசம் = கூந்தல்
- கேசி = கூந்தலை உடையவள்
- நீலகேசி = கரிய கூந்தலை உடையவள்

**பொதுவான குறிப்புகள்:**

- நீலகேசி என்றால் = கருத கூந்தலை உடையவள் என்று பொருள்
- இந்நூல் குண்டலகேசி என்னும் நூலிற்கு எதிராக எழுதப்பட்டது.

tnpsctamilnadu.weebly.com

- நூலுக்கு உரை எழுதியவர் = திவாகர வாமன முனிவர்.
- இவரின் உரை= "சமய திவாகரம்" எனப்படுகிறது.

## மேற்கோள்:

- கோறல் பொய்த்தல் கொடுங்களவு
  நீங்கிப் பிறர் மனைகண்மேல்
  சேரல் இன்றிச் செலும் பொருள்மேல்
  சென்ற சிந்தை வேட்கையினை
  ஆறு கிற்பின் அமர் உலகம்
  நுன்கண் கடியதாம் என்றாள்

## ➢ சூளாமணி

## சூளாமணியின் உருவம்:

- ஆசிரியர் = தோலாமொழித் தேவர்
- காலம் = கி.பி.பத்தாம் நூற்றாண்டு
- பாடல்கள் = 2330
- சருக்கம் = 12
- பாவகை = விருத்தம்
- சமயம் = சமணம்

## பெயர்க்காரணம்:

- மிக்க ஒளியையும் சிறப்பினையும் உடையது சூளாமணி. ஆற்றல்களும் சிறப்புகளும் கொண்டு திவிட்டனும் விசயனும் சூளாமணி போல் ஒளிர்ந்தமையால் நூல் இப்பெயர் பெற்றது.

## பொதுவான குறிப்புகள்:

- நூல் ஆசிரியர் தோலாமொழித் தேவரின் இயற் பெயர் = வர்த்தமான தேவர்.
- இந்நூலின் முதல் நூல் = வடமொழியில் உள்ள ஆருகத மாபுராணம்
- சூளாமணியின் கதை நாயகன் = திவிட்டன்
- நூலை முதலில் பதிப்பித்தவர்= சி.வை.தாமோதரம்பிள்ளை
- "விருதப்பாவை கையாள்வதில் இவர் சீவக சிந்தாமணி ஆசிரியரையும் மிஞ்சிவிட்டார்" என்கிறார் = மு.வரதராசனார்
- "சிந்தாமணியை விடச் செப்பமான நடையை உடையது சூளாமணி" என்று = கி.வா.ஜகன்னாதன் கூறுகிறார்.



tnpsctamilnadu.weebly.com

- "சிந்தாமணியிலும் கூட இத்தகைய ஓட்டமும் இனிமையும் இல்லை" என்கிறார் = தெ.பொ.மீ

**மேற்கோள்:**

- ஆணை துரப்ப அரவு உரை ஆழ்குழி
  நானவிர் பற்றுபு நாளும் ஒருவன் ஓர்
  தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
  மானுடர் இன்பம் மதித்தனை கோல் நீ

## ❖ ஐஞ்சிறுகாப்பியங்கள் அட்டவணை:

| நூல் | சமயம் | பாவகை | ஆசிரியர் | அமைப்பு |
|---|---|---|---|---|
| நாக குமார காவியம் | சமணம் | விருத்தம் | --------------------- | 5 சருக்கம், 170 பாடல் |
| உதயன குமார காவியம் | சமணம் | விருத்தம் | ---------------------- | 6 காண்டம், 369 பாடல் |
| யசோதர காவியம் | சமணம் | விருத்தம் | வெண்ணாவலூர் உடையார் வேள் | 5 சருக்கம், 320 பாடல் |
| நீலகேசி | சமணம் | விருத்தம் | | 10 சருக்கம், 894 பாடல் |
| சூளாமணி | சமணம் | விருத்தம் | தோலாமொழித்தேவர் | 12 சருக்கம், 2330 விருதப்பாக்கள் |

tnpsctamilnadu.weebly.com